**குற்றவியல் நீதித்துறை நடுவர் எண்–2 திருப்பத்தூர் வேலூர் மாவட்டம்**

**முன்னிலை : திரு.க.பிரபு. எம்.ஏ., எம்.எல்.,**
**நீதித்துறை நடுவர் எண்.2**
**திருப்பத்தூர்**

2023 ம் ஆண்டு பிப்ரவரி மாதம் 09 ஆம் நாள் வியாழக்கிழமை.
**சி.ஆர்.எம்.பி. எண்.13406/2022**
**F.NO.15441/2022**
**CNR.NO.TNVL1C0154472022**

அனுமுத்து, த/பெ. ரங்கசாமி,
சாலூர் கிராமம், திருப்பத்தூர். ...பிரியாதி

–/எதிராக/–

1. சீனிவாசன், த/பெ. சாமிநாதன்,
2. கோவிந்தசாமி, த/பெ. பொட்டோடன்,
3. மணி, த/பெ. நாசி,
4. கோவிந்தராஜி, த/பெ. நாசி,
5. தமிழ்மொழி, த/பெ. கிருஷ்ணன்,

1, 3, 4 எதிரிகள் செவ்வாத்தூர் கிராமம், 2 வது எதிரி செல்லரப்பட்டி கிராமம்,
5 வது எதிரி பெரியகண்ணாலப்பட்டி, திருப்பத்தூர்.

...எதிரிகள்

இந்த மனு 14.12.2022 அன்று கோப்பிற்கு எடுக்கப்பட்டு 07.02.2023 இறுதி விசாரணைக்கு வந்தபோது மனுதாரர் தரப்பில் வழக்கறிஞர் திரு. N.மோகன்,B.A.,B.L., அவர்கள் ஆஜராகியும், இதுநாள் வரை இந்நீதிமன்றப் பரிசீலனையில் இருந்து வந்தும் சான்றாவணங்களையும் சாட்சியங்களையும் பரிசீலனை செய்து இன்று இந்நீதிமன்றம் வழங்கும்

**உத்திரவு**

1. மனுதாரர் இம்மனுவினை கு.வி.மு.ச பிரிவு 156(3) ன் கீழ் எதிர்மனுதாரர்கள் மீது வழக்கு பதிவு செய்து தக்க நடவடிக்கை எடுக்குமாறு தாக்கல் செய்துள்ளார்.

2. மனுதாரர் சாலூர் கிராமத்தில் வசித்து வருவதாகவும், 2 வது எதிரி கோவிந்தசாமி அவருக்கு பக்கத்து ஊரான செல்லரப்பட்டி கிராமத்தில் வசித்து வருவதாகவும், 2 வது எதிரியின் தொழில் திருட்டு தொழில் என்றும், அவர் மீது பல கோர்ட்டுகளில் பல திருட்டு வழக்குகள் நடந்து வருவதாகவும், 2 வது எதிரி திருடும் டூவீலர் மற்றும் கார்களை 1 வது எதிரி சீனிவாசன் என்பவரின் வீடு மற்றும் நிலத்தில் மறைத்து வைப்பதாகவும், இவ்விரத்தை மனுதாரர் காவல் நிலையத்திற்கு தகவல் கொடுத்ததாகவும், அதனை 1 மற்றும் 2 வது எதிரிகள் தெரிந்துகொண்டு மனுதாரரை தீர்த்துக்கட்ட 3 வது எதிரி மணி, 4 வது எதிரி கோவிந்தராஜி மற்றும் 5 வது எதிரி தமிழ்மொழி ஆகியோர்களுடன் கூட்டு சேர்ந்து, 14.10.2022 ம் தேதி இரவு 09.00 மணியளவில்

மனுதாரர் தனது மனைவி முனியம்மாளுடன் ரோடில் நடந்து வந்தபோது, 1 முதல் 5 எதிரிகள் ஒரு கருப்பு நிற காரில் வேகமாக வந்து மனுதாரரை தாண்டி சிறிது தூரம் சென்று நிறுத்தியதாகவும், பின்னர் மேற்படி காரை 2வது எதிரி மனுதாரர் வந்த திசையை நோக்கி திருப்பி அதிவேகமாக ஓட்டிவந்து மனுதாரர் மற்றும் அவரது மனைவியின் மீது இடிக்க வந்ததாகவும், மனுதாரர் மற்றம் அவரது மனைவி ரோட்டில் மேற்கு பக்கம் உள்ள நிலத்தில் இறங்கி நின்று கொண்டதாகவும், பின்னர் எதிரிகள் மேற்படி காரை அதே வேகத்தில் ஓட்டி சென்றுவிட்டதாகவும், பின்னர் மறுநாள் காலையில் மனுதாரர் ஊர் முக்கியஸ்தர்களிடம் இதுபற்றி கூறி, மேற்படி சம்பவயிடத்திற்கு பொன்னுசாமி மற்றும் பழனி என்பவர்களை அழைத்து சென்று கார் டையர் தடத்தை காட்டி, செல்போனில் போட்டோ எடுத்ததாகவும், பின்னர் கடந்த 28.10.2022 அன்று மாலை சுமார் 06.00 மணியளவில் மனுதாரர் நடத்திவரும் பால் சொசைட்டியில் தன் மனைவியுடன் இருந்தபோது, 1 மற்றும் 2 எதிரிகள் டூவீலரில் வந்து 'எங்க திருட்டு விசயத்தில் தலையிட்டால் உன்னை இங்கேயே துண்டுதுண்டாக வெட்டி புதைத்து விடுவோம், ஜாக்கிரதை' என்று மிரட்டியதாகவும், இது சம்பந்தமாக 02.11.2022 ம் தேதி காவல் நிலையத்தில் புகார் கொடுத்ததாகவும், அதற்கு காவல் துறையினர் CSR ரசீது மட்டும் வழங்கியதாகவும், ஆனால் இதுநாள் வரையில் எதிரிகள் மீது நடவடிக்கை எடுக்கவில்லை என்றும், பின்னர் மீண்டும் 12.11.2022 ம் தேதி இரவு 08.00 மணியளவில் மனுதாரரும் அவரது மனைவியும் இருந்தபோது, 1வது எதிரி கருப்பு காரை ஓட்டிவர, 2 முதல் 5 வரையிலான எதிரிகள் அந்த காரில் வந்து, காரை நிறத்திவிட்டு அதிலிருந்து அவர்கள் கையில் கத்தி, தடி முதலான பயங்கர ஆயுதங்களை கொண்டு காரிலிருந்து இறங்கியதாகவும், பின்னர் 1 மற்றும் 2வது எதிரிகள் மனுதாரரை பார்த்து கத்தியை காட்டி 'நாங்க திருடுகிற தொழிலை செய்வதை காவல் நிலையத்துக்கு தகவல் கொடுக்கிறாயா? இனி இது மாதிரி தகவல் கொடுத்தால் உன்னை இந்த கத்தியாலேயே வெட்டி புதைத்து விடுவோம் ஜாக்கிரதை' என்று மிரட்டியதாகவும், மேலும் 3 முதல் 5 வரையிலான எதிரிகள் அவரவர் கையில் வைத்திருந்த தடியை காட்டி 'இவங்க செய்யும் திருட்டு தொழிலை தடுக்கிறாயா நாயே, நாங்க மக்கள் பாதை பத்திரிக்கையில் வேலை செய்கிறோம், அவர்கள் ஆடுமாடு, டூவீலர், கார் திருடுவார்கள், அதை கேட்க நீ யார், இது மாதிரி செஞ்சா இந்த தடியாலேயே அடித்து கொன்றுவிட்டு, பழியை வேறு நபர்கள் மீது போட்டுவிடுவோம், ஜாக்கிரதை, நீ எந்த காவல் நிலையம் போய் கேஸ் கொடுத்தாலும், எங்களை ஒன்றும் செய்ய முடியாது' என்று மனுதாரரை மிரட்டியதாகவும், மேற்படி சம்பவத்தை மனுதாரரின் மனைவி மற்றும் தாமலேரிமுத்தூர் கிராமத்தை சேர்ந்த சங்கர், ஜெயராமன் என்பவர்கள் பார்த்ததாகவும், மேற்படி எதிரிகளின் செயல்களை குறித்து அவர்கள் மீது நடவடிக்கை எடுக்கும்படி 14.11.2022 ம் தேதி கந்திலி காவல் நிலையத்தில் புகார்

கொடுத்தாகவும், ஆனால் கந்திலி காவல் ஆய்வாளர் அவர்கள் எவ்வித நடவடிக்கையும் எடுக்காததால், கடந்த 16.11.2022 ம் தேதி பதிவஞ்சல் மூலம் காவல் ஆய்வாளருக்கு புகார் அனுப்பியதாகவும், பின்னர் 21.11.2022 ம் தேதி திருப்பத்தூர் மாவட்ட கண்காணிப்பாளர் அவர்களுக்கு பதிவஞ்சல் மூலம் புகார் அனுப்பியதாகவும், மேற்படி புகார்களின் மீது காவல் ஆய்வாளர் அவர்கள் அவருக்கே தெரிந்த காரணங்களுக்காக எதிரிகள் மீது நடவடிக்கை எடுக்காமல் எதிரிகளுக்கு சாதகமாக செயல்படுவதாகவும், எனவே மேற்படி எதிரிகள் மீது இ.த.ச பிரிவுகள் 379, 506(2) மற்றும் 109 ன் கீழ் வழக்கு பதிவு செய்து நடவடிக்கை எடுக்கக்கோரி, கந்திலி காவல் ஆய்வாளருக்கு கு.வி.மு.ச பிரிவு 156(3) ன் கீழ் உத்தரவிடுமாறு இம்மனுவில் கோரியுள்ளார்.

3. மேற்படி தன்னுடைய மனுவில் கோரியுள்ள சங்கதிளுக்கு ஆதரவாக, கீழ்கண்ட ஆவணங்களை தாக்கல் செய்துள்ளார்,

i) 02.11.2022 ம் தேதியிட்ட கந்திலி காவல் நிலையத்தில் கொடுத்த புகார்மனு நகல்.

ii) 02.11.2022 ம் தேதியிட்ட CSR ரசீது.

iii) 14.11.2022 ம் தேதியிட்ட காவல் ஆய்வாளருக்கு அளித்த புகார் மனு நகல்.

iv) 17.11.2022 ம் தேதியிட்ட காவல் ஆய்வாளர் அவர்கள் புகார் பெற்றுக்கொண்டதற்கான அஞ்சலக ஒப்புகை அட்டை

v) 21.11.2022 ம் தேதியிட்ட திருப்பத்தூர் காவல் கண்காணிப்பாளருக்கு அளித்த புகார் மனு

vi) 22.11.2022 ம் தேதியிட்ட காவல் கண்காணிப்பாளர் அவர்கள் புகார் பெற்றுக் கொண்டதற்கான அஞ்சலக ஒ்புகை அட்டை

4. மேற்படி மனுதாரரின் மனுவையும் அவர் தாக்கல் செய்துள்ள மேற்படி 1 முதல் 6 வரையிலான ஆவணங்களையும் பரிசீலனை செய்கையில், மனுதாரர் தனக்கு எதிரிகளால் ஏற்பட்ட சம்பவம் குறித்து கந்திலி காவல் ஆய்வாளரிடம் 14.11.2022 அன்று புகார் கொடுத்தும், பின்னர் 16.11.2022 அன்று கந்திலி காவல் ஆய்வாளருக்கு பதிவஞ்சல் மூலம் புகார் அனுப்பியதாகவும், பின்னர் 21.11.2022 அன்று திருப்பத்தூர் மாவட்ட காவல் கண்காணிப்பாளர் அவர்களுக்கு புகார் அனுப்பியும் அந்த புகார் மனுவில் எவ்வித நடவடிக்கையும் எடுக்கப்படவில்லை என்பது தெரிய வருகிறது.

5. பாதிக்கப்பட்ட தரப்பினர் புகார் அளிக்கும் பட்சத்தில் அதன்மீது விசாரணை செய்து உரிய நடவடிக்கை எடுப்பது காவல்துறையின் அத்தியாவசிய கடமை. அத்தனைய விசாரணையில் தான் சம்பவம் நடந்தது உண்மையா, இல்லையா என தெரியவரும். மேற்படி சங்கதிகளின் அடிப்படையிலும், ஆவணங்களை பரிசீலனை செய்கையிலும் மனுதாரரின் புகார்மீது

காவல்துறையினர் எந்தவித விசாரணையும் மேற்கொள்ளவிலலை என்பது தெரியவருகிறது. எனவே, நீதிமன்றம் பிரிவு 156(3) ன் கீழ் இம்மனுவினை கருத்தில் கொண்டு உரிய உத்தரவு பிறப்பிப்பது நீதியின் பால் உகந்தது என இந்நீதிமன்றம் கருதுகிறது.

6. எனவே கந்திலி காவல் நிலையத்தார் மேற்படி மனுதாரரின் 14.11.2022 ம் தேதியிட்ட புகாரின் மீது உரிய விசாரணை செய்து அதில் முகாந்திரம் இருக்கும் பட்சத்தில் அதில் சம்பந்தபட்ட நபர்கள் மீது மட்டும் தகுந்த நடவடிக்கை எடுக்கவும், மேற்படி மனுவின் மீது எவ்வித நடவடிக்கை எடுக்கப்பட்டது என்பது பற்றி இந்நீதிமன்றத்திற்கு உரிய அறிக்கையின் மூலம் தெரியப்படுத்தவும் இதன்மூலம் உத்தரவிடப்படுகிறது.

இந்த உத்தரவு முழுவதும் என்னால் சொல்ல சொல்ல சுருக்கெழுத்து தட்டச்சரால் கணிப்பொறியில் பதிவு செய்யப்பட்டு என்னால் பிழை நீக்கம் காணப்பட்டு 2023–ஆம் வருடம் பிப்பரவரி மாதம் 09 ஆம் நாள் திறந்த நீதிமன்றத்தில் அவையறிய பகரப்பட்டது.

(ஒம்/–க.பிரபு)
நீதித்துறை நடுவர் எண்.2
திருப்பத்தூர்.

**இணைப்புகள்.**
**மனுதாரர் தரப்பு சாட்சிகள்** – இல்லை.
**மனுதாரர் தரப்பு ஆவணங்களின் பட்டியல்**

1. ம.த.ஆ.1 02.11.2022 ம் தேதியிட்ட கந்திலி காவல் நிலையத்தில் கொடுத்த புகார்மனு நகல்.
2. ம.த.ஆ.2 02.11.2022 ம் தேதியிட்ட CSR ரசீது.
3. ம.த.ஆ.3 14.11.2022 ம் தேதியிட்ட காவல் ஆய்வாளருக்கு அளித்த புகார் மனு நகல்
4. ம.த.ஆ.4 17.11.2022 ம் தேதியிட்ட காவல் ஆய்வாளர் அவர்கள் புகார் பெற்றுக்கொண்டதற்கான அஞ்சலக ஒப்புகை அட்டை
5. ம.த.ஆ.5 21.11.2022 ம் தேதியிட்ட திருப்பத்தூர் காவல் கண்காணிப்பாளருக்கு அளித்த புகார் மனு
6. மத.ஆ.6 22.11.2022 ம் தேதியிட்ட காவல் கண்காணிப்பாளர் அவர்கள் புகார் பெற்றுக் கொண்டதற்கான அஞ்சலக ஒப்புகை அட்டை

**எதிரிகள் தரப்பு சாட்சிகளின் பட்டியல்** – இல்லை.
**எதிரிகள் தரப்பு ஆவணங்களின் பட்டியல்** – இல்லை.

(ஒம்/–க.பிரபு)
நீதித்துறை நடுவர் எண்.2
திருப்பத்தூர்.